27th April 1959]

Japanese and Chinese methods of cultivation

* 171 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) நம் மானிலத்தில் கடந்த சாகுபடி காலத்தில் எத்தனை ஏக்கர் நிலத்தில் ஜப்பானிய முறை சாகுபடி செய்யப்பட்டது ?

(ஆ) அதன் மூலம் கிடைத்த உபரி விளைவின் உத்தேச மதிப்பு எவ்வளவு ?

(இ) ஜப்பானியமுறை சாகுபடி மூலம் எதிர்பார்த்த பலன் கிடைத்திருக்கிறதா ?

(ஈ) இதை விஸ்தரிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

(உ) இம்மானிலத்தில் சீன தேசத்து விவசாய முறை எங்கேனும் பரீட்சிக்கப்பட்டதா ?

(ஊ) அதன் பலன் என்ன ?

(எ) ஜப்பான், சைனு இரு தேச விவசாய முறைகளில் எது நம் நாட்டிற்கு உகந்தது என்ற முடிவிற்கு அரசாங்கம் வந்திருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) 1,260,219 acres (from 1st April 1958 to 31st December 1958).

(*b*) The approximate value works at Rs. 2,06,75,280 at the controlled rate.

(*c*) Yes, Sir.

(*d*) Instructions to intensify the campaign have been issued to the district staff from time to time. Regular propaganda meetings are held at various centres to make the ryots conversant with this method.

(*e*) No, Sir.

(*f*) & (*g*) Do not arise.

Sri A. VEDARATHNAM : இந்த ஜப்பானிய முறை விதை பொறுக்குவதிலிருந்து கையாளப்படுகிறதா, விதை விளைச்சலிலிருந்து உற்பத்தி ஆவது வரையில் அனுஷ்டிக்கப்படுகிறதா ? எந்த முறை வரையில் கையாளப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். அல்லது ஏதாவது ஒரு பகுதி வரையில் மட்டும் ஆரம்பிக்கப்பட்டு கையாளப்பட்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஜப்பானிய முறை என்பது ஏற்கெனவே தமிழ் நாட்டில் கையாளப்பட்டு வந்திருக்கிறது. இப்பொழுது சில மட்டும் அந்த முறைப்படி கையாளப்பட்டு வருகிறது. இதன் பிறகு எந்த அளவுக்கு ஜப்பானிய முறை நமக்கு உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறதோ அந்த அளவுக்கு அதைக் கையாளப்பட்டு வரும்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[27th April 1959

SRI V. K. KOTHANDARAMAN : நமக்குப் பக்கத்தில் இருக்கும் ஆந்திரா ராஜ்யத்தில் சைனு தேச முறையைக் கையாண்டு அதிக உற்பத்தி செயயப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதாவது எக்கர் ஒன்றுக்கு 360 மூட்டை விளைந்திருப்பதாக சொல்லப்படுகிறது. அதைப்பற்றி சர்க்காருக்கு ஏதாவது தெரியுமா ?

MR. SPEAKER : கேள்வி கேட்கும்போது மற்ற விஷயங்களைச் சொல்லாமல் கேள்வி மட்டும் கேட்கவேண்டும். மற்ற விஷயங்களைத் தெரி[illegible]டுத்தக்கூடாது. டைரெக்ட் கேள்வியாகக் கேட்கவேண்டும். ஆந்திராவில் நடக்கக்கூடிய விஷயத்தைப்பற்றி இங்கே கேட்கக்கூடாது.

SRI V. K. KOTHANDARAMAN : ஒரு எக்கருக்கு 360 மூட்டை நெல் சாகுபடியாவதாகச் சொல்லப்படுகிறது, சைனு விவசாய முறைப்படி. அதைப்பற்றி சர்க்காருக்கு ஏதாவது தெரியுமா ? அதேபோன்று இங்கே அப்படிப்பட்ட விவசாயத்தைப் பரப்புவதற்கு சர்க்கார் இனிமேலாவது ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படிச் செல்லப்படுவது ஒரு எக்கருக்கு 360 மூட்டை அல்ல, 360 டன். அது கொஞ்சம் கூட சரியல்ல, உண்மையும் அல்ல. ஏற்கெனவே இதைப்பற்றி நான் சொல்லி இருக்கிறேன். 3 6 டன் என்பதை மாற்றி அப்படிச் சொன்னதாக தெரிகிறது. ஆகையால் இதை வைத்துக்கொண்டு அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை ஏற்றுக் கொள்தவற்கு இல்லை. மத்திய அரசாங்கம் சில நிபுணர்களை சைனு தேசத்திற்கு அனுப்பி வைத்து அவர்கள் எப்படி விவசாயம் செய்கிறார்கள் என்று பார்த்து வரவேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN : விவசாய விதைப்பண்ணை, பசுந்தாள் உரம் தயாரிப்பது, விவசாய விதை உற்பத்தி செய்வது பொறுக்கு விதைகள் தயாரிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் விவசாய இலாகா. அதைப்போலவே பஞ்சாயத்துகளும் இப்படிபட்ட வேலைகளைச் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ? விவசாய இலாகா செய்வதை பஞ்சாயத்துக்கள் செய்ய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது சர்க்காரின் உத்தேசம். பஞ்சாயத்துக்கள் செய்ய முடியாது. அல்லது கூட்டுறவு ஸ்தாபனங்கள் இப்படிப்பட்ட வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது அரசாங்கத்தின் எண்ணம்.

SRI T. S. RAMASWAMY PILLAI : சைனு தேசத்திற்கு சில நிபுணர்களை அனுப்பியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் திரும்பி வந்து ரிப்போர்ட் கொடுத்துவிட்டார்களா ? அந்த ரிப்போர்ட்டின் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்த நிபுணர்கள் இன்னும் சைனு தேசத்திற்கு போனதாகத் தெரியவில்லை. இந்த அரசாங்கம் இதனால் இதைப்பற்றி எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்வதற்கு இல்லை. மத்திய அரசாங்க பிரதிநிதிகள் போய் வந்த பிறகு மத்திய அரசாங்கம் என்ன முடிவு எடுக்கிறது என்று பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அதன் பிறகு தான் இந்த அரசாங்கம் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வரும்.

SRI B. K. LINGA GOWDER : Are the Government aware that the Chinese method of cultivation in Tibet was a failure?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no idea, Sir.

27th April 1959]

SRI S. LAZAR : Are the Government aware of certain special problems confronted by the agriculturists who have taken to the Japanese method of cultivation? In view of the fact that there has not been higher yield in many places, will the Government have these problems solved?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the Officers of the Agriculture Department have been contacting the agriculturists in the various districts and taluks and wherever the ryots are confronted with difficulties, the department tries to help them to solve their problems.

Small-scale Industries

* 172 *Q.*—SRI **M. C. MUTHUKUMARASWAMY** : பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா :—

(அ) 1956–57, 1957–58 வருடங்களில் ஹரிஜன நல டிபார்ட்மென்ட் மூலம் சிறு கைத்தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) அவ்வருடங்களில் அதற்காகச் செலவிட்ட தொகை எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Rs. 6,44, 040 in 1956–57; Rs. 7,18,448 in 1957–58.

(*b*) Rs. 3,40,666 in 1956–57.
Rs. 5,39,009 in 1957–58.

Location of Capital of India at Hyderabad.

* 173 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have recommended to the Union Government for the location of the Capital City of India at Hyderabad as being the central place?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI K. VINAYAKAM : Will the Government at least now make a recommendation to the Central Government and persuade them to locate their capital at least temporarily for a few months in a year at Hyderabad and if not, in Wardha to commemorate the memory of the Father of the Nation?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not think we have to commemorate the memory of the Father of the Nation by this way. I think the very fact that we are living in a free country is sufficient enough. Apart from that, the services rendered by the Father of the Nation will be remembered for centuries and centuries together.

If it is a question of locating the capital of a State in a centrally-located place, they may point out that Madras was not centrally located. These points must be taken into consideration before making any recommendation to them.